Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, SEPTEMBER 15, 2023

வெள்ளிக்கிழமை செப்டெம்பர் 15, 2023 | ஒளி: 09 கதிர்: 085 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு★ FREE

## 65 ஆயிரம் ஏக்கரில் பயிர்கள் பாதிப்பு



2023 ஜனவரி முதல் செப்டெம்பர் 12ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வறட்சி, கடும் மழை மற்றும் பீடைகள் காரணமாக 65 ஆயிரத்து 871.32 ஏக்கர் நெல் மற்றும் ஏனைய பயிர்களும் 67 ஆயிரத்து 122 விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ச்சி P2

அநுராதபுரம் சிறைச்சாலையில்

## தமிழ்க் கைதிகளின் தலையில் துப்பாக்கி வைத்து அச்சுறுத்தல்

### இராஜாங்க அமைச்சர் லொஹானுக்கு பிணை

தமிழ் அரசியல் கைதிகளை, முழந்தாளிடச் செய்து, தன்னுடைய துப்பாக்கியை தலையில் வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என குற்றச்சாட்டப்பட்ட பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் எவிந்த ரத்வத்தவை இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு அநுராதபுரம் பிரதான நீதவானும் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான நாலக சஞ்சீவ ஜயசூரிய வியாழக்கிழமை (14) உத்தரவிட்டார்.

சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த போது, அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் இரவோடு இரவாக நுழைந்த லொஹான் ரத்வத்தே, அங்கு அடைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளை அழைத்து, முழந்தாளிடச் செய்து, அவர்களின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பிலேயே அவருக்கு எதிராக நீதிமன்றில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சி P2




## சுங்கத்துடன் தொடர்பான குற்றங்களே பரவியுள்ளன




போதைப்பொருள் கடத்தல், இலஞ்சம் மற்றும் ஊழல், வர்த்தக அடிப்படையிலான வரும்படிகளின் பணம் தூயதாக்கல் உள்ளடங்கலாக சுங்கத்துடன் தொடர்புடைய குற்றங்கள் என்பன மிகவும் அதிகம் பரவியுள்ள பாரிய குற்றக்கூறுகளாக இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2


## ஒக்டோபர் 5 வரை விண்ணப்பிக்கலாம்




2022-2023 கல்வியாண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் வியாழக்கிழமை (14) முதல் ஒக்டோபர் 5ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை செப்டெம்பர் 14 முதல் ஒக்டோபர் 5, 2023 வரை சமர்ப்பிக்கலாம்.

மேலும், பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டல் கையேடு, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள நிலையில், விண்ணப்பங்களை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளமான www.ugc.ac.lk மூலம் இணையத்தில் சமர்ப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2



ஐஎம்எப் குழுவின் மீளாய்வு ஆரம்பம்

## சவால்களை வெற்றிகொள்ள நெருக்கமாக ஒத்துழைப்பு

### அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஷெஹான் தெரிவிப்பு

எதிர்காலத்தில் உள்ள சவால்களை வெற்றிகொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் குழுவுடன் நெருக்கமாக ஒத்துழைத்து வருவதாகவும் நிலையான பொருளாதாரத்தை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் முழுமையாக அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் உள்ளூர் அதிகாரிகளை ஜனாதிபதி செயலகத்தில் வியாழக்கிழமை (14) சந்தித்து, நீட்டிக்கப்பட்ட கடன் வசதி ஏற்பாட்டின் முதல் மீளாய்வை ஆரம்பித்துள்ளதாக குறிப்பிட்டார்.

அனைத்து பலதரப்பு நிறுவனங்கள், அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் நட்பு நாடுகளுடன் நெருக்கமாக பணியாற்றுவதன் முக்கியத்துவத்தை அரசாங்கம் அங்கிகரிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2

## பேத்திக்கு விஷம் ஏற்றியது ஏன்? புட்டுப்புட்டு வைத்தார் பாட்டி

பு.கஜிந்தன்

பேத்தியின் எதிர்காலம் குறித்த கவலையில் பேத்திக்கு விஷ ஊசி செலுத்தி, நானே கொலை செய்தேன். பின்னர் நானும் உயிர்மாய்த்துக்கொள்ள ஊசியை செலுத்திக் கொண்டேன் என, 12 வயது சிறுமியின் பாட்டி, பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

திருநெல்வேலி பகுதியில் உள்ள தனியார் விடுதி அறையில் இருந்து 12 வயது சிறுமி சடலமாகவும் 55 வயதான பெண்ணொருவர் சுயநினைவற்ற நிலையிலும் செவ்வாய்க்கிழமை (12) மீட்கப்பட்டனர். தொடர்ச்சி P2



## ராஜபக்ஷ குடும்பத்தை தண்டிக்க வேண்டும்

பு. கஜிந்தன்



கோட்டாபய ஜனாதிபதியாக இருக்கும் போதும், அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும் போதும் பல கொடுமைகளை எங்களது மக்களுக்கு இழைத்திருக்கின்றார். அந்தக் குடும்பம் மற்றும் அதில் சம்மந்தப்பட்டவர்கள் அத்தனை பேரும் சர்வதேச விசாரணையில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ) அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் வியாழக்கிழமை (14) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது, ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், தொடர்ச்சி P2

இலங்கைக்கான புதிய

## இந்திய உயர்ஸ்தானிகராக ஸ்ரீ சந்தோஷ் ஜா நியமனம்



பெல்ஜியத்துக்கான இந்திய தூதராக பணியாற்றி வரும் ஸ்ரீ சந்தோஷ் ஜா இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2

## நிலக்கரி இறக்கும் பணி ஆரம்பித்தது



2023 மற்றும் 2024ஆம் ஆண்டு பருவகாலத்துக்கான முதலாவது நிலக்கரி தொகுதியை இறக்கும் பணி, நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். தொடர்ச்சி P2

## 2023 க.பொ.த உயர்தர பரீட்சை நேர அட்டவணை வெளியானது




2023ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில், பரீட்சைக்கான நேர அட்டவணையை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது. தொடர்ச்சி P2

## ஓய்வூதிய வைத்தியர்களை மீண்டும் அழைக்க திட்டம்



சுகாதார துறையில் நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஓய்வுபெற்ற வைத்தியர்கள் மற்றும் விசேட வைத்தி நிபுணர்களைகளை சேவைக்கு மீண்டும் அழைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற வைத்தியர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைக்க உள்ளதாகவும் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார். தொடர்ச்சி P2

## ஸ்ரீலங்கனுக்கு 80 விமானிகளை ஆட்சேர்ப்பு செய்யத் திட்டம்

தேசிய விமான நிறுவனமான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு இந்த வருடத்தில் 30 விமானிகளையும் அடுத்த வருடத்தின் நடுப்பகுதியில் மேலும் 50 விமானிகளுமாக 80 பேரை ஆட்சேர்ப்பு செய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான சேவை கல்லூரியில் இடம்பெற்ற செயலமர்வில் பிரதம நிறைவேற்று அதிகாரி ரிச்சர்ட் நட்டால் மேற்குறிப்பிட்ட விடயத்தைக் தெரிவித்தார்.

அதிக எண்ணிக்கையிலான விமானிகள் விமான நிறுவனத்தை விட்டு வெளியேறுவதால் விமான நிறுவனம் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் விமான ஊழியர்களின் வெளியேற்றத்தால் இறுக்கமான சூழ்நிலையை தாம் எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் கடந்த 10 முதல் 12 மாதங்களில் சுமார் 50 தொடக்கம் 60 விமானிகளை இழந்துள்ள நிலையில், மோசமான சூழ்நிலை காரணமாக விமான சேவைகளையும் இரத்து செய்ய வேண்டி ஏற்படும் என்றும் குறிப்பிட்டார். தற்போது 3 பெண்கள் உட்பட 143 கப்டன்கள் பணியாற்றிவரும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் சுமார் 30 பெண் விமானிகள் பணியாற்றுவதாக தெரியவருகிறது.




## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது



இலங்கையின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது என்றும் இலங்கை தனது மறுசீரமைப்பு முயற்சிகள் மீதான நம்பிக்கையை மேம்படுத்தவும் முதலீடுகளை கவர்வதற்கும் ஜப்பான் போன்ற நாடுகளுடன் ஒத்துழைத்துச் செயற்பட எதிர்பார்க்கிறது என்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## தமிழ்க் கைதிகளின் தலையில் துப்பாக்கி வைத்து அச்சுறுத்தல்

சந்தேகத்திற்குரிய இராஜாங்க அமைச்சருக்கு எதிரான வழக்கை 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி முதல் தடவையாக விசாரிக்க தீர்மானித்த பிரதான நீதவான், சந்தேகத்திற்குரிய இராஜாங்க அமைச்சரை அன்றைய தினம் மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த வழக்கின் முதலாவது சாட்சியான பூபர சிங்கன் சூரியபாலன், இரண்டாவது சாட்சியான மணியரசன் சுலக்ஷன் ஆகியோரை அன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகி, வழக்கு தொடர்பான சாட்சிகளை வழங்குமாறு மேலும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்றம் வழங்கிய முன்னைய உத்தரவின் பிரகாரம், சந்தேகத்திற்குரிய இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, முதல் தடவையாக திறந்த நீதிமன்றத்தில் வியாழக்கிழமை (14) ஆஜராகியிருந்தார்.

சந்தேகநபரான இராஜாங்க அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டை நீதிமன்றம் வாசித்த பின்னர், சந்தேகநபரான இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தன் மீது சுமத்தப்பட்டிருக்கும் சகல குற்றச்சாட்டுகளையும் மறுத்த அவர், தான் நிரபராதியென ஜனாதிபதியின் சட்டத்தரணி சம்பத் மென்ட்ஸ் ஊடாக நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப்பிரிவு தனது ஆரம்ப சமர்ப்பணங்களில் அநுராதபுரம் பிரதான நீதவான் நாலக சஞ்சீவ ஜயசூரியவிடம் தெரிவித்தது.

2021 செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாள்களில் சந்தேகநபர் (முன்னாள் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் எவிந்த ரத்வத்த) அநுராதபுரம் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள, தமிழ் அரசியல் கைதிகளின் மீது மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல் செய்துள்ளார் என்பதற்கு இலங்கை தண்டனைச் சட்டத்தின் 183வது பிரிவின்படி போதிய ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்படும் என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, சட்டமா அதிபரின் பணிப்புரையின் பிரகாரம் இலங்கை குற்றவியல் சட்டத்தின் 486ஆவது பிரிவின் கீழ் சந்தேகநபரான லொஹான் எவிந்த ரத்வத்தவிற்கு எதிராக இந்த நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது.

சந்தேகத்திற்குரிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் எவிந்த ரத்வத்த, அநுராதபுரம் சிறைச்சாலையில் கடமையாற்றிய சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் அன்றைய தினம் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் உட்பட 14 பேர் இந்த வழக்கில் சாட்சிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

## 65 ஆயிரம் ஏக்கரில் பயிர்கள் பாதிப்பு

இலங்கையில் பதிவாகிய பயிர் சேதங்கள் தொடர்பாக கமநல காப்புறுதி சபை, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கையளித்துள்ள அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் அதிகளவாக 26 ஆயிரத்து 813.67 ஏக்கர் பயிர்கள் சேதமடைந்துள்ளதுடன் 32 ஆயிரத்து 245 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டாவதாக உடவளவ வலயத்திலும் மூன்றாவதாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அதிக சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன், மாத்தளை, புத்தளம், பொலன்னறுவை மற்றும் மொனராகலை ஆகிய இடங்களிலும் அதிகளவிலான பயிர் சேதங்கள் பதிவாகியுள்ளன.

கமநல காப்புறுதி சபை இறுதி பயிர் சேத மதிப்பீட்டு அறிக்கையை வழங்கியவுடன் அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சரவைக்கு அறிவிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவை அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ள நிலையில், எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

## ஒக்டோபர் 5 வரை...

இந்தக் கையேட்டை பிரதேச மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட புத்தக விற்பனை நிலையங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட புத்தக விற்பனை நிலையங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வளாகம் மற்றும் அஞ்சல் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வழிகாட்டல் கையேடு விற்பனை செய்யப்படும் புத்தக விற்பனை நிலையங்கள் தொடர்பில் அறிந்துகொள்ள www.ugc.ac.lk எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளனர். புதிய கல்வியாண்டில் அரச பல்கலைக்கழகங்களில் மொத்தம் 45 ஆயிரம் மாணவர்களை சேர்த்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

## சவால்களை வெற்றிகொள்ள நெருக்கமாக ஒத்துழைப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் முதலாவது மீளாய்வு வெற்றிகரமாக முடிவடைந்தமை, இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் ஸ்திரத்தன்மை மீதான நம்பிக்கையை மேம்படுத்தும் என்றார்.

இரண்டாவது தவணையைப் பாதுகாப்பதற்கும் இலங்கையின் பொருளாதார மீட்சியில் நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் இந்த மீளாய்வு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும் என்றும் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது மீளாய்வு வெற்றிகரமாக நிறைவடைந்ததன் மூலம் பொருளாதார மீட்சிக்கான வலுவான நிலையில் இலங்கை அமைவதோடு, 2024 ஆம் ஆண்டில் வளர்ச்சிக்கான நம்பிக்கைக்குரிய பாதையை அமைக்கிறது என்றார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் குழு எதிர்வரும் செப்டெம்பர் 27ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுங்கத்துடன் தொடர்பான

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு வெளியிட்ட பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தல் தொடர்பான 2021/2022ஆம் ஆண்டுகளுக்கான தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டின் மட்டுப்படுத்தப்பட்ட விடய அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் துறை பங்குதாரர்களுடன் இணைந்து நிதியியல் உளவறிதல் பிரிவால் நடத்தப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு உருவாக்கப்பட்டதாக மத்திய வங்கி வியாழக்கிழமை (14) தெரிவித்தது.

இம்மதிப்பீடானது நாட்டிலுள்ள பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதிக்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை இனங்காண்பதை இலக்காகக் கொண்டது.

போதைப்பொருள் கடத்தல், இலஞ்சம் மற்றும் ஊழல், வர்த்தக அடிப்படையிலான வரும்படிகளின் பணம் தூயதாக்கல் உள்ளடங்கலாக சுங்கத்துடன் தொடர்புடைய குற்றங்கள் என்பவற்றை மிகவும் அதிகம் பரவியுள்ள பாரிய குற்றக்கூறுகளாக மதிப்பீடு இனங்கண்டுள்ளது.

இவற்றுள், பணம் தூயதாக்கல் தொடர்பான அச்சுறுத்தல் நடுத்தர குறைந்தளவாக மதிப்பிடப்பட்டது.

## ராஜபக்ஷ குடும்பத்தை தண்டிக்க வேண்டும்

“கொக்குதொடுவாயில் மனித புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டு அதில் முன்னாள் பெண் போராளிகளது எச்சங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. இதற்கு சர்வதேச விசாரணை வேண்டும் என தென்னிலங்கை தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும். இதற்கு அவர்கள் மௌனம் சாதிக்க முடியாது.

இலங்கை அரசாங்கம் அதாவது கோட்டாபய ஜனாதிபதியாக இருக்கும் போதும், அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும் போதும் பல கொடுமைகளை எங்களது மக்களுக்கு இழைத்திருக்கின்றார். பல இன்னல்களையும் மனிதவுரிமை மீறல்களையும் அவர் செய்துள்ளார். அந்தக் குடும்பம் மற்றும் அதில் சம்மந்தப்பட்டவர்கள் அத்தனை பேரும் சர்வதேச விசாரணையில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

மன்னாரில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் கிடப்பிலே உள்ளன. இப்படி ஒவ்வோர் இடத்திலும் மனித எச்சங்களை கண்டு பிடித்து கிடப்பில் போடும் நிலை தான் காணப்படுகிறது. ஆகவே இந்த விடயத்தில் சர்வதேசம் சரியான கவனத்தை எடுக்க வேண்டும்.

புத்த கோவில்கள் அமைப்பது, இராணுவம் பல இடங்களை பிடிப்பது இதற்கான காரணங்கள் எல்லாம் அவர்கள் பிடிக்கின்ற இடங்களை தோண்டுகின்ற போது எங்களது மக்களின் மனித எச்சங்கள் உள்ளன. அந்த விடயத்தை மறைப்பதற்காகவே இவை துரிதமாக நடைபெறுவதாக சந்தேகப்படுகின்றேன்.

ஆகவே, இந்த விடயத்தில் ஒட்டுமொத்த சிங்கள தலைவர்களும் குரல் கொடுக்க வேண்டும். சர்வதேச விசாரணையை தமிழ் மக்கள் கோருகின்றார்கள். அந்தவகையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கபடும் வகையில் தென்னிலங்கையில் உள்ளவர்களும் மனச்சாட்சிப்படி நடக்க வேண்டும்” என்றார்.

## இந்திய உயர்ஸ்தானிகராக ஸ்ரீ சந்தோஷ் ஜா நியமனம்

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக பணியாற்றிவரும் கோபால் பாக்லே, அவுஸ்திரேலியாவுக்கான இந்திய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள நிலையிலேயே புதிய உயர்ஸ்தானிகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் ஸ்ரீ சந்தோஷ் ஜா விரைவில் தமது கடமைகளை பொறுப்பேற்க உள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## 2023 க.பொ.த உயர்தர...

2022ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி, 2023ஆம் ஆண்டு மீண்டும் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் திணைக்களம் கோரியுள்ளது.

இதேவேளை, 2022ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் 16 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் ஒன்லைனில் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்றும் https://onlineexams.gov.lk/eic எனும் இணையத்தளத்துக்குள் பிரவேசிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 4ஆம் திகதி வெளியான பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, இம்முறை 63.3 சதவீதமானோர் அரச பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

166,938 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர் என்பதுடன், 84 மாணவர்களின் பெறுபேறுகளை அதிகாரிகள் நிறுத்தி வைத்துள்ளதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

## நிலக்கரி இறக்கும் பணி ஆரம்பித்தது

2024 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் 40 நிலக்கரி கப்பல்களை இறக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தனது சமூக வலைத்தள பதிவில் அவர் குறிப்பிட்டார்.

செப்டெம்பர் மாதத்தில் நான்கு நிலக்கரி தொகுதிகள் இலங்கையை வந்தடையவுள்ளதாக அறியமுடிகிறது.

## ஓய்வூதிய வைத்தியர்களை மீண்டும் அழைக்க திட்டம்

அதிகளவான வைத்தியர்கள் சேவையை விட்டு வெளியேறியதாலும் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெற்று நாடு திரும்பாததாலும் பல அரச வைத்தியசாலைகளில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை இன்னும் முழுமையாக வெளிவராததால் நிலைமை மேலும் தொடரும் என்று அதிகாரிகள் அனுமானித்துள்ளனர்.

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு...

‘அண்மைய உயர் நிலை சுற்றுப்பயணங்கள் மற்றும் இந்து சமுத்திரத்தின் நோக்கு’ என்ற தலைப்பில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொவிட்-19 தொற்று நோய்க்குப் பின்னர் இலங்கையின் தற்போதைய பொருளாதார மீட்சிக்கான, வலுவான மறுசீரமைப்பு மற்றும் மறுமலர்ச்சி நிகழ்ச்சி நிரல்களுடன் இலங்கையை இந்து சமுத்திர வலயத்திற்கு உயர்வான இடத்திற்கு கொண்டுச் செல்ல அவசியமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாக குறிப்பிட்டார்.

சர்வதேச ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்வதற்கு, இலங்கையின் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார நிலைத்தன்மை என்பவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய சாகல ரத்நாயக்க, ஒரு நாடு என்ற வகையில் நிலைத்தன்மை, நம்பகத்தன்மை உடனான விம்பத்தை தக்கவைத்துக் கொள்வதன் ஊடாக, உலகில் இலங்கையின் அபிமானத்தை பாதுகாக்க முடியும்.

இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் முயற்சிகளின் போது, டிஜிட்டல் நிதியியல் மற்றும் எரிசக்தி பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் சாகல ரத்நாயக்க வலியுறுத்தினார்.

இலங்கையின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் முயற்சிகளில் தனித்துவமான மைல்கல் இலக்கு என மேற்படி முற்சிகளை குறிப்பிடலாம் என்று தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் ஆரம்ப கட்டங்களில், இலங்கை சர்வதேச பங்குதார்களிடத்தில் உத்தரவாதத்தை கோரியிருந்தது. பெரிஸ் சமவாயத்துடன் இணைந்து இந்தியாவும் சீனாவும் உயர் பங்களிப்பை வழங்கியிருந்தன. பிரதான பங்குதாரர்களின் தொடர்ச்சியான ஆதரவை இலங்கை எதிர்பார்க்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய சீன விஜயம் இலங்கைக்கு மிகவும் சாத்தியமாக அமைந்திருந்தாகவும் விரைவில் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீன-இலங்கை உறவுகளைப் பொறுத்தவரை, சீனாவின் குறிப்பிடத்தக்க இரண்டு முதலீடுகளில் ஒன்றான துறைமுக நகரத் திட்டத்திற்கு அவசியமான புதிய நீதி கட்டமைப்பை தயாரிப்பதற்கான ஆலோசனைகள் சவால்களுக்கு மத்தியிலும் கோரப்பட்டுள்ளது என்றும் இந்த சட்ட ரீதியான செயற்பாடுகள் எதிர்கால முதலீடுகளை கவரும் வகையில் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வான், கடல், நிலம், பொருட்கள், எரிசக்தி பாதுகாப்பு மற்றும் மின் இணைப்புகளின் மேம்பாடு உட்பட பல்வேறு வழிகளில் தொடர்புகளை மேலும் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் ஆராயப்பட்டது.

ஆசிய வலயத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இலங்கையின் அமைவிட ரீதியான முக்கியத்துவம் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, இராஜதந்திரிகள் மற்றும் கல்வியியலாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

## பேத்திக்கு விஷம் ஏற்றியது...

சுயநினைவற்ற நிலையில் மீட்கப்பட்ட பெண், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையின் பின் உடல்நலம் தேறிய நிலையில், அவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்,

பொலிஸ் விசாரணையின் போது, தனது பெயர் நாகபூசணி (வயது 55) எனவும் தான் ஒரு மருத்துவ தாதியாக கடமையாற்றியவர் எனவும் தனது பேத்தியின் பெயர் பார்த்திமா ஹீமா (வயது 12) என தெரிவித்துள்ளார்.

“ நான் மருத்துவ தாதியாக பணியாற்றியுள்ளேன். எனது மகள் முஸ்லிம் இளைஞன் ஒருவரை காதலித்து திருமணம் செய்துகொண்டாள். அவர்களுக்கு பிறந்த குழந்தைதான் பார்த்திமா ஹீமா (வயது 12). அவர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டு இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். அதன் போது அவர்களது பிள்ளையை என்னுடன் வளர்ந்து வந்தேன்.

சில காலத்தில் இருவரும் வெவ்வேறு திருமணம் செய்து வாழச் சென்று விட்டனர். இந்நிலையில், பேத்தியின் தகப்பன், “எனது பிள்ளையை என்னுடன் அனுப்புங்கள்; நான் வளர்க்கிறேன்” எனக் கூறி, பேத்தியை அழைத்துச் சென்று விட்டார்.

பேத்தி என்னை விட்டு பிரிந்ததும், அவளின் பிரிவுத் துயரம், அவளின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகுதோ என்ற கவலையும் எனக்கு ஏற்பட்டது. அதனால் நான் சில மாதங்கள் மனஉளைச்சலுக்கு உள்ளாகி இருந்தேன்,

கடந்த சில தினங்களுக்கு முன்னர், திருகோணமலைக்கு சென்று, எனது பேத்தியின் தந்தையிடம், “சில நாள்கள் பேத்தி என்னுடன் இருக்கட்டும். வீட்டுக்கு கூட்டி போய் சில நாள்களில் மீண்டும் அழைத்து வந்து விடுகிறேன்” எனக் கூறி பேத்தியை அழைத்துக்கொண்டு, யாழ்ப்பாணம் வந்தேன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மருத்துவ மனையில் பேத்திக்கு மருத்துவம் செய்ய வந்துள்ளோம் எனக் கூறி அந்த மருத்துவமனைக்கு அருகில் உள்ள தங்குமிடத்தில் அறையை வாடகைக்கு பெற்று, தங்கி இருந்தோம்.

அப்போது, பேத்தியின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகுதோ என்ற கவலையில் பேத்தியை கொலை செய்து விட்டு, நானும் உயிரை மாய்த்துக்கொள்வோம் என முடிவெடுத்தேன்.

அறையில் பேத்தியை விட்டு விட்டு, அருகில் உள்ள மருந்தகத்திற்கு சென்று, தூக்க மாத்திரை உள்ளிட்ட மாத்திரைகளையும் ஊசியையும் (சிறிஞ்) வாங்கினேன். என்னிடம் மருத்துவ தாதி என்பதற்கான அடையாள அட்டை இருந்தமையால், அதனைக் காட்டி மருந்துகளை வாங்கினேன்.

அறைக்கு வந்து பேத்திக்கு தூக்க மாத்திரைகளை போடக் கொடுத்து, அவள் தூங்கிய பின்னர் மருந்துகளை கலந்து ஊசி மூலம் அவளின் உடலில் செலுத்தினேன்.

பின்னர் நானும் அதனை எனக்கு செலுத்திக்கொண்டேன். ஊசி ஏற்றியதில் அவள் இறந்து விட்டாள். நான் காப்பாற்றப்பட்டு விட்டேன் எனத் தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து மேலதிக விசாரணைகளின் பின்னர், உயிரிழந்த சிறுமியின் பாட்டியை யாழ். நீதவான் நீதிமன்றில் வியாழக்கிழமை (14) பொலிஸார் முற்படுத்திய போது, அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, “எங்கள் இறப்பிற்கு யாரும் காரணம் இல்லை. எங்களை வீட்டுக்கு எடுத்து செல்ல வேண்டாம்” என சிறுமியின் பாட்டி பொலிஸாருக்கு எழுதிய கடிதமும் பொலிஸாரால் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மதுபானசாலையை அகற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

■ பு. கஜிந்தன், எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணம், உடுப்பிட்டி சந்தியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலையை அகற்றுமாறு கோரி வியாழக்கிழமை (14) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மதுபானசாலை அமைந்துள்ள குறித்த பகுதியில் பாடசாலைகள், கோவில்கள் என்பன இருப்பதால் இந்த மதுபானசாலை அகற்றப்பட வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

மதுபானசாலையை சில தினங்களுக்குள் அகற்றாவிட்டால், தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். மேலும் போராட்டம் தொடர்பான மகஜர், வடக்கு மாகாண ஆளுநர், அரசாங்க அதிபர் உள்ளிட்டவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







## இலக்கியக்களத்தில் விவாத அரங்கு

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில், வெள்ளிக்கிழமை (15) மாலை 5.30 மணியளவில் இலக்கியக்கள நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில், 'காதலை வெளிப்படுத்துவதில் அதிக இரசனைமிக்க தலைமுறை அன்றைய தலைமுறையே / இன்றைய தலைமுறையே' என்னும் தலைப்பில் விவாத அரங்கு நடைபெறவுள்ளது

இந்நிகழ்வுக்கு பிரதாஸ் சுப்பிரமணியம் நடுவராக கடமையாற்றுவார். வாதிகளாக: செல்வன் சிவரட்ணம் தனுஜன், செல்வன் சந்திரசேகரன் சச்சின், செல்வன் இளையதம்பி மதுஜன் ஆகியோர் பங்கேற்பர். செல்வன் சிவஞானசுந்தரம் திவிதர்ஷன், செல்வன் மனோகரன் சதுர்ஷனன், செல்வன் அனுப் அபினோஷன் ஆகியோர் பிரதி வாதிகளாக பங்கேற்பர்.

## சர்வதேச நாணய நிதியத்தின் 57 உறுதிமொழிகளில்

# 38 மட்டுமே பூர்த்தி

வெரிட்டே ரிசர்ச்சின் சமீபத்திய முன்னேற்றப் புதுப்பிப்பின்படி, சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) 17ஆவது திட்டத்தின் கீழ் ஓகஸ்ட் மாத இறுதிக்குள் நிறைவேற்ற திட்டமிடப்பட்ட 57 கண்காணிக்கப்படக்கூடிய உறுதிமொழிகளில் 38ஐ இலங்கை நிரூபணமாக 'நிறைவேற்றியுள்ளது'. 11 உறுதிமொழிகளின் முன்னேற்றம் இன்னும் 'அறியப்படவில்லை' என்றும், அதே நேரத்தில் எட்டு உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

2023 மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதற்கும், இரண்டாவது கொடுப்பனவை அங்கிகரிப்பதற்காகவும் IMF இன் குழு இந்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளது. எவ்வாறாயினும், அது இப்போது மேலும் ஒக்டோபர் இறுதி வரை தாமதத்தை எதிர்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வரவிருக்கும் IMF மீளாய்வு, முதலில் ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்ட உறுதிமொழிகளை மையமாகக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீட்டிக்கப்பட்ட காலக்கெடு இருந்தபோதிலும், உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

நிதி வெளிப்படைத்தன்மை தளத்தின் எதிர்பார்க்கப்படும் அம்சங்கள் என்ன? இத் தளமானது அரையாண்டு அடிப்படையில் மூன்று முக்கிய வகைகளின் கீழ் தகவல்களை வெளியிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. (1) முக்கியமான பொது கொள்முதல் ஒப்பந்தங்கள் அனைத்தும்,

(2) முதலீட்டு சபையின் மூலம் வரி விலக்கு பெறும் அனைத்து நிறுவனங்களினதும் பட்டியல்,

(3) சொகுசு வாகன இறக்குமதியில் வரி விலக்கு பெறும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியல். இவ்வகையான தளம் அரசாங்க நடவடிக்கைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதுடன், அரச வருவாய் செலவில் தனியார் நன்மைகளை வழங்கும் அதிகார துஷ்பிரயோகத்தைத் தடுக்க உதவும்.

இலங்கையின் பேரண்டப் பொருளாதார மீட்சி மற்றும் உறுதிப்பாட்டுக்கு முக்கியமானதாக ஆட்சி மற்றும் ஊழல் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்ட, இலங்கைக்கான IMF இன் முதல் வேலைத்திட்டமும் இதுவாகும். அதனால், மேற்கூறிய நிதி வெளிப்படைத்தன்மையை வெளிப்படுத்தும் ஒரு தளத்தை நிறுவுவதற்கான உறுதிமொழியின் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக தோல்விக்கான காரணங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக இருக்கும் போது, IMF பெரும்பாலும் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறிய நாடுகளிடம் மென்மையாக நடந்து கொண்ட வரலாறு உள்ளது.

## தடை வலைகளை பயன்படுத்த வேண்டாம்



சட்ட விரோத மீன்பிடிக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்து, திருகோணமலையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை, ஆளுநர் அலுவலகத்தில் வியாழக்கிழமை (14) சந்தித்தனர்.

இந்நிலையில், குறித்த பிரச்சினை தொடர்பாக மீனவ சங்கத்தினருடனும், கடற்படையினர், கரையோர பாதுகாப்பு படையினர், பொலிஸ் அதிகாரிகள், அதிரடி படையினர் ஆகியோருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தக் கூடாது எனவும், சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடுபவருக்கு எதிராக மீன்பிடி திணைக்களம், கரையோர பாதுகாப்பு படையினர், பொலிஸ் அதிகாரிகள், அதிரடி படையினர் ஆகியோரை சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மீனவர் அமைப்புக்கு ஆதரவளிக்கும் வகையில் ஆளுநர் கருத்து வெளியிட்டார்.

## ரயிலில் மோதுண்டு யானை பலி



■ வா. கிருஸ்ணா

கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு யானையொன்று புதன்கிழமை (13) இரவு பலியான சம்பவம் மட்டக்களப்பிலிருந்து இடம்பெற்றுள்ளது.

வெலிக்கந்தைக்கும் அலேசபுரத்திற்கும் இடையே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் ரயில் பயணம் நீண்ட நேரம் தடைப்பட்டிருந்தது. வனஜீவராசிகள் மற்றும் ரயில்வே திணைக்களங்களின் ஊழியர்கள், இராணுவத்தினர் இணைந்து உயிரிழந்த யானையை அப்புறப்படுத்தியதன் பின்னர், ரயில் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. கடந்த மூன்று தினங்களில், இப்பகுதியில் ரயிலில் மோதுண்டு இரண்டாவது யானை உயிரிழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இராணுவ சார்ஜன்ட் வீட்டில் ஆயுத கிடங்கு

■ ஷேன் செனவிரத்ன

ஹதரலியத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பகோட்டதெனிய பிரதேசத்தில் உள்ள இராணுவ பணியாளரான சார்ஜட் வீட்டில் இருந்து ஒரு தொகை ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிடைத்த தகவல்களுக்கு அமைய, வீட்டை சோதனைக்கு உட்படுத்தியதில், ரி-56 துப்பாக்கிக்கான ரவைகளை பயன்படுத்தும் வகையில் 12 துளைகளைக் கொண்ட நவீன துப்பாக்கி, ரி-56 ரக துப்பாக்கி தோட்டாக்கள் 200 ஈயத் துண்டுகள் இரண்டு கிலோ கிராம் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகத்திற்கிடமான வீட்டைச் சோதனையிட்ட போது, குறித்த இராணுவ சார்ஜன்ட் விடுமுறையில் வீட்டில் தங்கியிருந்ததால், அவர் கைது செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. சந்தேகநபரை கலகெதர நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஹதரலிய பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## கூரையை பிரித்து கொள்ளை; இளைஞர்கள் நால்வர் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



உரிமையாளர் வீட்டிலில்லாத போது, வீட்டுக் கூரையை பிரித்து வீட்டுக்குள் நுழைந்து, நகைகளைக் கொள்ளையிட்ட நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள டீன் வீதியில் வீடொன்றின் உரிமையாளர்கள் கொழும்புக்குச் சென்றிருப்பதை அறிந்த திருடர்கள், வீட்டின் கூரை மீதேறி, வீட்டுக்குள் நுழைந்து, அலுமாரியில் இருந்த நகைகளையும் 2,000 ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

மேலும், திருடப்பட்ட நகைகளை மூதூரிலுள்ள நகைக்கடையில் விற்பனை செய்துள்ள நிலையில், அக்கடையிலிருந்து நகைகள் மீட்கப்பட்டதுடன் நகைக்கடை உரிமையாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள காத்தான்குடியைச் சேர்ந்த நான்கு இளைஞர்களையும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## பதிவு செய்யாவிடின் சங்கத்தில் இருந்து நீக்கவும்

■ பு. கஜிந்தன்



யாழ்ப்பாண மாவட்ட முச்சக்கர வண்டிச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டும் அரச நிறுவனங்களான பிரதேச சபை மற்றும் மாநகர சபைகளில் பதிவு செய்யப்படாத ஓட்டோக்களை சங்கத்திலிருந்து நீக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின் போதே, மேற்கண்டவாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சங்கத்தில் பதிவு செய்யப்பட்டு சேவையில் ஈடுபடும் ஓட்டோக்கள் கட்டாயம் பிரதேசத்தில் உள்ள அரச நிறுவனத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படாத ஓட்டோக்களுக்கு இரண்டு மாத கால அவகாசம் வழங்கி, உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறும் இல்லாவிட்டால் சங்கத்திலிருந்து அவர்களது பெயரை நீக்கி விடுமாறும் அமைச்சர் தெரிவித்தார்.

## நிஷாந்தவுக்கு விளக்கமறியல்



போலியான இலக்கத் தகடு பொருத்தப்பட்ட வாகனத்தை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில், காலி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதியமைச்சருமான நிஷாந்த முத்துஹெட்டிகமவை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி பிரதான நீதவான் இசுரு நெட்டி குமார வியாழக்கிழமை (14) உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஊழல் பிரிவின் பணிப்பாளருக்கு நோட்டீஸ் அனுப்புமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## கடலுக்குச் சென்ற இரு மீனவர்கள் மாயம்

■ பு. கஜிந்தன்

தலைமன்னாரிலிருந்து மீன்பிடிப்பதற்காக, படகொன்றில் செவ்வாய்கிழமை (12) கடலுக்குச் சென்றிருந்த மீனவர்கள் இருவரை காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மீனவர்களை தேடிச் சென்ற படகுகளில், இரண்டு படகுகள் கடல் கொந்தளிப்பு, கடும் காற்றின் காரணமாக கச்சதீவில் தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற்போன இரண்டு மீனவர்களும் தலைமன்னார், ஊர்மனையைச் சேர்ந்தவர்கள் எனவும் இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையான ஜே.நிக்சன் டிலக்ஸ் கூஞ்ஞ மற்றும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான ரி. சுமித்திரன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.








# தன்னுயிரை மாய்த்தல் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது

ஒவ்வொரு மனிதனும் ஏதோவொரு பிரச்சினைக்கு நாளாந்தம் முகங்கொடுத்துக்கொண்டுதான் இருக்கின்றான். அதில் சிலரது பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடும். இன்னும் சிலரது பிரச்சினை இழுபட்டுக்கொண்டே போகும் போது, அதற்குள் புதுப்புது பிரச்சினைகளும் முளைத்துவிடும்.

பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து தீர்வை பெற்றுக்கொள்ள முடியாதவர்கள், இறுதியில் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டு, தன்னை நம்பியிருக்கும் குடும்பத்தினரையே பிரச்சினைகளுக்குள் தள்ளிவிடுகின்றனர்.

நமது நாட்டின் அன்றாட செய்திகளில், 'தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளுதல்' இடம்பிடித்து கொண்டிருக்கின்றது. 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் பெரும்பாலும் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். ஒவ்வொரு 40 செக்கனுக்கும் உலகில் எங்கோவொரு மூலையில் ஒருவர் தன்னுயிரை மாய்த்துக்கொள்கின்றார்.

ஒவ்வோர் ஆண்டும் சுமார் எட்டு இலட்சம் மக்கள் தங்களுயிரை மாய்த்துக்கொள்கின்றனர் என உலக சுகாதார அமைப்பு அறிக்கையின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. உலகில் நிகழும் மரணங்களுக்கு, முக்கிய காரணங்கள் 20 கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில், தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளுதலும் ஒன்றாகும்.

அதனால்தான், உலக மனநலக் கூட்டமைப்பு மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியன இணைந்து, உலக தற்கொலை தடுப்புத் தினத்தை செப்டெம்பர் 10 ஆம் திகதி அனுஷ்டித்தது. தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளுதலை தடுக்கவும் அதுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மனச்சோர்வு, காதல் முரண்பாடு, வறுமை, வேலையின்மை, ஒத்துழைப்பு இன்மை ஆகியவற்றால் பெரும்பாலானவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். சமீபத்திய புள்ளிவிவரங்களின் பிரகாரம் பார்த்தோமெனில், ஒரு இலட்சம் பேருக்கு 15 பேர், தங்கள் உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். 'செயற்பாடு மூலம் நம்பிக்கையை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளில் இவ்வருடத்துக்கான உலக தற்கொலை தடுப்புத் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஒவ்வொருவரும் ஏதோவொரு பிரச்சினைக்கு நாளாந்தம் முகங்கொடுத்துக்கொண்டுதான் இருக்கின்றனர். அதிலிருந்து விடுபட்டு மேலெழுவதற்கு பல தடைகளை கடந்தேயாக வேண்டும். சிலர், போனால் போகட்டுமென நினைத்து, அடுத்தடுத்த கட்டங்களுக்கு காய்களை நகர்த்திச்செல்வர்.

எனினும், பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடாதவர்கள், வெறுமனே காலத்தை கழிப்பதன் ஊடாக, மேன்மேலும் பிரச்சினைகளை வளர்த்துக்கொள்வர். பிரச்சினைகள் பல மடங்காக அதிகரித்து விட்டால், அதற்கு முகங்கொடுக்க முடியாது, விபரீதமான முடிவுகளை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இவற்றில், பெரும்பாலானவை கடன் பிரச்சினைகளாகவே அமைகின்றன. கிடைக்கும் வருமானத்தில் அல்லது சம்பளத்தில், தங்களுடைய குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். அவசர தேவைகளுக்காக மட்டுமே, அதுவும் தங்களால் மீளச் செலுத்த முடிந்தளவு தொகையளவு மட்டுமே கடன் வாங்கவேண்டும்.

கிடைக்கும் வருமானத்தை விட, தேவைகள் அதிகரிக்குமாயின் கடன்வாங்கும் அந்த முயற்சியை கைவிடவேண்டும். வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு மாற்று வழிகளைத் தேடவேண்டும். அதனூடாக ஓரளவுக்கேனும் மனநிம்மதியான வாழ்க்கையை வாழலாம்.

பலரும் "பொதுவாக பிரச்சினை" என்றே கூறிக்கொண்டிருப்பர். அந்த வசனத்தை அவர்கள், தங்களுடைய அகராதியில் இருந்து தூக்கியெறிந்துவிட்டு, 'சவால்களுக்கு முகங்கொடுப்போம்' எனச் சபதம் எடுத்தால், வாழ்க்கை ரம்மியமாகும்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

பெரும் பசியைவிட மனம் களைத்துப் போவதே கடினமானது. அதை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரமும் எடுக்கின்றது.

எல்லோரது நெஞ்சமும் அடிக்கடி சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மாறுவதுண்டு. சிலவேளை நகைப்பார்கள்; சிலசமயம் வேலைப்பழுவால் எரிச்சல்படுவார்கள். குழந்தைகளை ஆர்வத்துடன் அணைக்கும்போது சந்தோச சாகரத்தில் மூழ்கிவிடுவார்கள். உணர்ச்சிக்கு மனிதன் அடிமையாகின்றான்.

ஆர்வத்துடன் பணிசெய்பவர்கள், திடீர் எனக் கிடைக்கும் அதிர்ச்சித் தகவல்களால், தங்கள் நிலையை மறந்துவிடுகின்றனர். அவை சந்தோசமானவையாகவும் இருக்கலாம். துன்பமான செய்தி கேட்ட மனம், பலம் இழந்துவிடுகின்றது.

முரண்பாடான மாறுநிலை வாழ்க்கையில் இயல்பானது என்பார்கள். கட்டுப்படுத்தும் நிலையை, பொறுமையுடன் உருவாக்குக! இந்நிலையில் இருந்து விடுபடுவது எப்படி? எங்களால் எல்லாச் சந்தர்ப்பத்திலும் தன்னிலை இழக்காமல் இருந்து, தங்களைத் தக்கவைத்துக் கொள்ள, மனஒடுக்கம் முக்கியமானது.

சிந்தனைகளைத் தெளிவூட்ட வல்லது தியானம் ஆகும். எதையும் பதற்றத்துடன் நோக்காமல், சாந்தமான நிலையில் நோக்குவதற்கு துணைபுரியும். தனிமை தேவையானது; அமைதியை ஊட்டுகின்றது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### தேயிலை தோட்டங்கள் அழியும் அபாயம்



தேயிலைத் தோட்டங்களில் இரத்தினக்கற்களை அகழும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளமையால், தேயிலை பயிர்ச்செய்கை அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தோட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பொகவந்தலாவ, நோர்வூட், மஸ்கெலியா பிரதேசங்களில் சில தோட்டத் தொழிலாளர்கள், தேயிலைத் தோட்டங்களுக்கு அடியில், மாணிக்கக் கற்களைத் தேடும் நடவடிக்கையை சட்டவிரோதமான முறையில் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகளால், தேயிலைத் தோட்டங்கள் அழிந்து வருவதோடு, எதிர்காலத்தில் தோட்ட மக்கள் தமது தொழிலைக் கைவிட்டுவிட வேண்டிய அபாயநிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்படும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய அபாயகரமான நிலைமைகள் தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீவிர கவனம் செலுத்தி, தேயிலை தோட்டங்களை அழிக்கும் நபர்கள் கைது செய்யபபட்டு, கடும் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுதத் எச். எம். ஹேவா

கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின்னர் – 18:

# சுதந்திரம் நோக்கிய சுடுகாட்டுப் பயணம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் சுதந்திரத்தை நோக்கிய நகர்வில், சில முக்கிய நிகழ்வுகள் நடந்தேறின. அவை சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் இனமுரண்பாடுகளுக்கான அடிப்படைகளையும் சிங்களத் தேசியவாதத்தின் குணங்குறிகளையும் கொண்டிருந்தன. ஆனால், அக்காலப்பகுதியில் அவை முக்கிய கவனம் பெறவில்லை.

அதிகாரத்தில் இருந்த இலங்கையர்கள் அனைவரும், உயர் மேட்டுக்குடியினராக இருந்தனர். இனத்துவ அடையாளங்களைக் கடந்து, அவர்களிடையே ஒரு நல்லுறவு இருந்தது. குறிப்பாக, சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் மேட்டுக்குடி அரசியல் தலைமைகள், தங்கள் இனவுணர்வைக் கடந்த வர்க்கப் பாசத்தைக் கொண்டிருந்தார்கள்.

சிங்கள அரசியல் தலைமைகளுடனான நல்லுறவும் தனிப்பட்ட நட்பும், இனத்துவ முரண்பாடுகளைக் கவலையின்றிக் கடந்து போக அனுமதித்தது. இதற்கு சில உதாரணங்களை நோக்குதல் தகும்.

1936ஆம் ஆண்டு டி.எஸ். சேனநாயக்க தலைமையில் உருவாக்கப்பட்டதான சிங்களவர்களை மட்டுமே கொண்ட அமைச்சர் குழுவின் உருவாக்கமானது, எதிர்கால இலங்கையின் பேரினவாத அரசியல் போக்குக்கு ஒரு முன்னெச்சரிக்கையாக இருந்தது. ஆனால், இதை யாரும் பெரிதாகக் கொள்ளவில்லை.

இதில் கவனிப்புக்குரிய விடயம் யாதெனில், தனிச் சிங்களவரைக் கொண்ட மேற்படி அமைச்சரவையை அமைக்கத் திட்டம் தீட்டியதில் சி. சுந்தரலிங்கத்தின் பங்கு பெரிது. ஆனால், பின்னாளில் சிங்கள அரசியல் தலைமைகளின் ஏமாற்றமான நடவடிக்கைகளின் பின்னர், 1956இல் 'தமிழ் ஈழம்' என்ற கருத்தை முன்வைத்தவரும் இவரே! அதிலும் மேலாக, 1967இல் தொடங்கிய தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில், சாதித் தடிப்புடையோருக்காக வாதாடியவரும் சி. சுந்தரலிங்கமே ஆவார்.

1943இல் பாரோன் ஜயதிலகவின் மரணத்தையடுத்து, இந்த அமைச்சர் குழுவில் படு பிற்போக்குவாதியானவரும் தனது தந்தையான பொன்னம்பலம் அருணாசலத்திலும் மிக வேறுபட்டவருமான அருணாசலம் மகாதேவா எனும் தமிழர் சேர்க்கப்பட்டார். அவர் பெயருக்குத் தமிழராக இருந்தார். 1947இல் இலங்கையில் மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. அதை முடிவுக்குக் கொண்டுவர, அரசாங்கம் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு அனுமதியளித்தது. பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு வீ. கந்தசாமி என்ற அரசாங்க ஊழியர் பலியானார். கந்தசாமியைச் சுட்டுக் கொன்ற பொலிஸ் படைக்குப் பொறுப்பான உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக அருணாசலம் மகாதேவாவே இருந்தார். அதேவேளை, இரண்டாவது சட்டசபையில் சிறுபான்மையினருக்கு எதிரான பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அனைத்தையும் அங்கிருந்த சிறுபான்மையின பிரதிநிதிகள் அமைதியாக அனுமதித்தனர்.

தீவிர மாக்ஸியவாதியும் மருத்துவப் பட்டதாரியுமான எஸ்.ஏ. விக்கிரமசிங்க, டொனமூர் யாப்பின் கீழ் இலங்கையின் அரச சபைக்காக 1931 நடந்த முதலாவது தேர்தலில் வெற்றி பெற்ற ஒரே இடதுசாரியாவார். அவரது துணைவியார் டொறீன் விக்கிரமசிங்க 1932இல் 'சூரியமல்' இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர். 'சூரியமல்' இயக்கம் கொலனியாதிக்கத்துக்கு எதிராக வலுவான இயக்கமாக உருவானதோடுடு பல சமூகப் பணிகளையும் ஆற்றியது.

நிலப்பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், சாதாரண மக்களோடு நெருங்கிப் பழகி, இனத்துவ அடையாளங்களைக் கடந்து, மருத்துவ - சமூக சேவைகளை மேற்கொண்டதால் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றவராக எஸ்.ஏ விக்கிரமசிங்க இருந்தார்.

இனத்துவ அடையாளங்களைக் கடந்து, உழைக்கும் மக்கள் என்ற அடிப்படையில் அந்த மக்களை ஒன்றிணைக்கும் இவரது பணி, சிங்களத் தேசியவாதத் தலைமைகளுக்கு முக்கிய சவாலாக இருந்தது.

இரண்டாவது சட்டசபைக்கான தேர்தலில் டி.எஸ் சேனநாயக்க, டி.பி ஜயதிலக ஆகியோரது வழிகாட்டலில் எஸ்.ஏ விக்கிரமசிங்கவுக்கு எதிராக கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதால் எஸ்.ஏ விக்கிரமசிங்க சட்டசபைக்குத் தெரிவாகவில்லை.

இரண்டாவது சட்டசபையில், இலங்கையில் பணியாற்றும் இந்திய தொழிலாளரில் ஒரு பகுதியினரை இந்தியாவுக்குத் திரும்பி அனுப்ப வேண்டும் என்று கோரி, ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக சட்டசபைக்குத் தெரிவாகியிருந்த இடதுசாரிகள் என்று தங்களை அழைத்துக் கொண்ட என். எம் பெரேராவும் பிலிப் குணவர்த்தனாவும் வாக்களித்தனர். இந்தியர் மீதான பகைமை உணர்வை, டி.எஸ் சேனநாயக்க தனக்கு வசதியாகப் பயன்படுத்தினார்.

என். எம் பெரேரா, பிலிப் குணவர்த்தனா, லெஸ்லி குணவர்தன, றொபேட் குணவர்தன, கொல்வின் ஆர். டி சில்வா, எஸ்.ஏ. விக்கிரமசிங்க ஆகியோரைத் தலைமைக் குழுவாகக் கொண்டு, இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியாக லங்கா சமசமாஜக் கட்சி 1935இல் உருவானது.

பிற ஆசிய நாடுகளைப் போல, 'கொம்யூனிஸ்ட்' என்ற பெயரை கட்சிக்கு சூட்டாமல், சோசலிசத்தை அடையாளப் படுத்தும் 'சமசமாஜ' என்ற சொல்லையுடைய பெயர் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் சூட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

சுதந்திரத்துக்கு முந்தைய அரசியல் சூழலில், இனவாத நிலைப்பாடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வேர்விட்டன. 1945இல் முடிவுக்கு வந்த இரண்டாம் உலகப் போர், பிரித்தானிய கொலனிகளின் விடுதலைக்கான வாய்ப்புகளை வழங்கியது.

இந்திய விடுதலைப் போராட்டம், பிரித்தானியாவுக்கு மிகப்பெரிய சவாலாக இருந்தது. இதனால் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்குவது தவிர்க்க இயலாததாகியது. ஆனால், இலங்கையில் நிலைமைகள் மிகவும் வேறுபட்டனவாக இருந்தன.

இலங்கையில், சுதந்திரப் போராட்டம் என்றவொன்று நிகழவில்லை. அதற்கு மேலாக சிங்களத் தேசியவாதத் தலைவர்கள் எல்லோருமே கொலனிய விசுவாசிகளாக இருந்தனர். அவர்கள் எந்த நிலையிலும், பூரண சுதந்திரம் கேட்கவில்லை. பிரித்தானிய முடியாட்சிக்கு உட்பட்ட 'டொமீனியன்' எனப்படும் சுயாட்சியே, அதிகபட்ச எதிர்பார்ப்பாக இருந்தது.

இக்காலப்பகுதியில், சட்டசபையின் கலந்தாலோசனை இல்லாமல் டி.எஸ் சேனநாயக்க அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை பிரித்தானியாவிடம் கோரினார். ஜனநாயக மறுப்பின் ஓர் அத்தியாயமாக இதைக் கருத முடியும். இவ்வாறான செயற்பாடுகளே, இலங்கையின் தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்களிடம் இருந்தது. இதன் தொடர்ச்சியே ஜே.ஆர் ஜெயவர்தன உருவாக்கிய 'நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி' முறையாகும் என்பதை நினைவிலிருத்தல் தகும்.

டி.எஸ் சேனநாயக்கவின் தலைமையிலான அமைச்சரவை, அரசியலமைப்பு வரைவு ஒன்றை 1944 முற்பகுதியில் தயாரித்தது. அதை ஆராய்வதற்கு ஓர் அரசியலமைப்பு ஆணைக்குழுவை நியமிப்பதற்கு லூயிஸ் மவுண்ட்பற்றன் பிரபு ஆதரவு வழங்கியதால், பிரித்தானிய ஆட்சியாளர்கள் அதற்கு உடன்பட்டனர். எனினும் அந்த ஆணைக்குழுவின் அதிகாரம், சேனநாயக்கவின் அமைச்சர் சபை தயாரித்த அரசியலமைப்பு வரைவுக்கும் அப்பால் சிறுபாண்மையினரது நலன்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இதை டி.எஸ். சேனநாயக்க ஏற்க மறுத்தார்.

இருந்தாலும், 1944 செப்டெம்பரில் சோல்பரி பிரபு தலைமையிலான ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

சேனநாயக்கவும் அமைச்சரவை உறுப்பினர்களும் சோல்பரி ஆணைக்குழுவைப் பகிஷ்கரிப்பதாக அறிவித்தனர். ஆனால், பின்கதவால் உரையாடல்களை நிகழ்த்தினர். தனிப்பட்ட முறையில் ஆணைக்குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினர். இதில் சிறுபான்மையினரின் உரிமைகள் ஒரு பேசுபொருளாக இருந்தன.

'இலங்கை தேசியம்' என்ற அடிப்படையில் சோல்பரி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இருக்க வேண்டும் என்றும் சிறுபான்மையினருக்குச் சலுகைகள் காட்டப்படக் கூடாது என்பதிலும் டி.எஸ் சேனாநாயக்க உறுதியாக இருந்ததாக ஆணைக்குழு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளார்கள். 1945இல் டி.எஸ் சேனநாயக்கவுக்கு சோல்பரி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் ஒரு பிரதி, அவை வெளியிடப்பட முன்னரே இலண்டனில் காண்பிக்கப்பட்டது.

டி.எஸ் சேனாநாயக்க, இலங்கை குறித்த அரசியல் முடிவுகள் தனக்கு சார்பாக அமையும் வகையில் பார்த்துக் கொண்டார். அதற்காக அவர், பிரித்தானியாவின் நம்பிக்கைக்குரிய அடியாளாக இருந்தார். கொலனியாதிக்கத்தில் இருந்து பூரண விடுதலையைக் கோரிய கொம்யூனிஸ்டுகள் இலங்கையில் தடை செய்யப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போரில், சோவியத் ஒன்றியம் இறங்கிய சூழ்நிலையில் கொம்யூனிஸ்டுகள் மீதான தடை நெகிழ்த்தப்பட்டது. கொம்யூனிஸ்டுகள் 1943இல் இலங்கை தேசிய காங்கிரஸில் இணைந்தனர். அங்கு அவர்கள், எவ்வித இடைக்கால ஏற்பாடுமின்றி, நேரடியாகவே 'சுதந்திரம்' என்ற கருத்தை வலியுறுத்தினர். அதற்கு இளம் காங்கிரஸ் உறுப்பினர்களது ஆதரவு இருந்தது.

இதன் விளைவாக, இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவர்கள் இடையே இருந்த பழைமைவாதிகள் பதற்றமடைந்தனர். கொம்யூனிஸ்டுகள் அனுமதிக்கப்பட்டதை அடுத்து டி.எஸ் சேனநாயக்க, இலங்கை தேசிய காங்கிரஸில் இருந்து விலகினார்.

இதன் தொடர்ச்சியாக, 1946ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியை டி.எஸ் சேனநாயக்க உருவாக்கினார். அதன் முக்கியமான பங்காளிகளாக இலங்கை தேசிய காங்கிரஸ், சிங்கள மகாசபை ஆகிய இரண்டும் இருந்தன. இதற்குள் முஸ்லிம் லீக்கும் உள்ளீர்க்கப்பட்டது. ஆனால் தமிழ்க் காங்கிரஸ் இணைக்கப்படவில்லை. தமிழ்க் கட்சிகளுக்கும் அமைப்புகளுக்கும் அழைப்பு விடப்படவுமில்லை.

இவ்வாறு, சிங்கள பெருந்தேசியவாத நோக்கத்துடனேயே சுதந்திரம் நோக்கி இலங்கை நகர்ந்தது. டி.எஸ் சேனநாயக்க டொமினியன் அந்தஸ்துடனான அதிகாரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார். ஆனால், நடந்தது வேறு!

Saegis Campus இடமிருந்து

# 75% வரை புலமைப்பரிசில்




இலங்கையில் உயர்கல்விச் சேவைகளை வழங்கும் *Saegis Campus*, தனது பத்து வருட பூர்த்தியை இவ்வாண்டு கொண்டாடும் நிலையில், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு 75% வரை புலமைப்பரிசில்களை வழங்க முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளது.

ஆகக்குறைந்தது மூன்று பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இந்தக் கற்கைகளை தொடர்வதற்கு இணைய முடியும். அவர்கள் பெற்றுக் கொண்ட சித்திகளின் அடிப்படையில் புலமைப்பரிசில் வழங்கப்படும். மூன்று பாடங்களிலும் 'A' சித்தியைப் பெற்றவர்களுக்கு 75% புலமைப்பரிசிலும், 'B' சித்தி பெற்றவர்களுக்கு 45%, 'C' மற்றும் 'S' சித்தி பெற்றவர்களுக்கு முறையே 30% மற்றும் 15% புலமைப்பரிசில் வழங்கப்படும். கற்கைநெறியின் முதல் வருடத்துக்கு இந்தப் புலமைப்பரிசில் பொருத்தமானதாக அமைந்திருக்கும் என்பதுடன், மாணவரின் கல்விசார் தேர்ச்சியின் அடிப்படையில் அடுத்து வரும் ஆண்டுகளுக்கும் நீட்டிக்கப்படும்.

தெரிவு செய்யக்கூடிய கற்கைளில் *Bachelor of Business Management (Hons)* சுற்றுலாத்துறையில் அல்லது விருந்தோம்பல் துறையில் விசேடத்துவம் பெறுவது, சந்தைப்படுத்தல், மனித வளங்கள் முகாமைத்துவம் அல்லது கணக்கீடு மற்றும் நிதியியல், *Bachelor of Business Administration (BBA)*, முதல் *Bachelor of Science Honours (BSc (Hons))*, கணினி விஞ்ஞானம், மென்பொருள் பொறியியல் மற்றும் *IT* ஆகியவற்றில் விசேடத்துவம், மற்றும் *Bachelor of Information Technology (BIT)* போன்றன அடங்கியுள்ளன.

மாணவர்களுக்கு நெகிழ்ச்சியான பயிலல் முறையை தெரிவு செய்து கொள்ள முடியும். முதல் இரண்டு வருடங்களுக்கு வாரநாள் வகுப்புகளுக்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள முடியும். அதன் பின்னர் எஞ்சியிருக்கும் இரண்டு வருடங்களுக்கும் வார இறுதி வகுப்புகளுக்கு மாற்றிக் கொள்ள முடியும். நுகேகொட நகரில் அமைந்துள்ள *Saegis Campus*, நவீன வசதிகள் படைத்த பயிலல் அம்சங்களை வழங்குவதுடன், மேலதிக ஆங்கில மொழி வகுப்புகள், பாதுகாப்பான தங்குமிட வசதிகள், தொழில்நிலை வழிகாட்டல்கள், பரந்தளவு பிரத்தியேக விருத்தி நிகழ்ச்சிகள் போன்றவற்றை வழங்குகின்றது.

அதிகளவு போட்டிகரத் தன்மை வாய்ந்த தொழிற்றுறைகளினுள் உத்தரவாதத்துடனான தொழில் பயிலல் வாய்ப்புகளையும் *Saegis Campus* வழங்குகின்றது. இதனூடாக தொழில் நிலையில் நேரடி அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், கற்கை நிறைவடைந்ததும் தமது தொழில் வாய்ப்பைப் பெறும் வாய்ப்பை மேம்படுத்திக் கொள்ளவும் முடியும்.

விரிவுரையாளர்களும் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களாக திகழ்வதுடன், பலர் டொக்டர் பட்டம் பெற்றவர்களாக உள்ளனர். தமது பாடம் தொடர்பில் ஆழமான மற்றும் போதியளவு கற்பித்தல் அனுபவத்தையும் கொண்டுள்ளனர்.

பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றால் அனுமதியளிக்கப்பட்ட பட்ட பாடநெறிகளை *Saegis Campus* வெற்றிகரமாக வழங்குகின்றது. அரசாங்கம் அறிமுகம் செய்த மாணவர்களுக்கு வட்டியில்லாத கடன் திட்டங்களை பயன்படுத்தும் வசதியையும் வழங்குகின்றது. கல்வியகத்தால் *Pearson HND*கள், மற்றும் *top-up* பட்டங்கள் மற்றும் பிரித்தானியாவின் *Canterbury Christ Church University* உடன் இணைந்து பட்டப்பின்படிப்பு கற்கைகளும் வழங்கப்படுகின்றன.

# SLT-MOBITEL eTeleshop க்கு கௌரவம்




*SLT-MOBITEL eTeleshop*, அண்மையில் நடைபெற்ற *BestWeb.LK 2023* நிகழ்வில் 'சிறந்த e-வணிக இணையத்தளம்' எனும் பிரிவில் விருதை சுவீகரித்திருந்தது. இந்த விருது வழங்கும் நிகழ்வு *Monarch Imperial* ஹோட்டலில் நடைபெற்றது.

டிஜிட்டல் பிரிவில் சிறப்புக்கான அர்ப்பணிப்பு, பாவனையாளர் அனுபவம், புத்தாக்கம் ஆகியவற்றில் இணையத்தளத்தின் அர்ப்பணிப்பு ஆகியவற்றை இந்த விருது வெளிப்படுத்தியிருந்தது. முக்கியமாக, *SLT-MOBITEL eTeleshop* இன் இணையத்தளம் தனித்த இணையப் பக்கமாக இயங்க ஆரம்பித்து மூன்று வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளதையும் குறிப்பதாக அமைந்துள்ளது.

*BestWeb.LK* போட்டியை, *LK Domain Registry* ஏற்பாடு செய்திருந்ததுடன், இலங்கையின் முன்னணி இணையத்தள வடிவமைப்பு போட்டியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உள்நாட்டில் வடிவமைக்கப்படும் இணையத்தளங்களின் தரம், பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், பாவனையாளருக்கு நட்பு மற்றும் பாதுகாப்பு போன்றவற்றை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. 13ஆவது வருடமாக முன்னெடுக்கப்பட்ட இந்தப் போட்டி, கடுமையான மத்தியஸ்த தெரிவை பின்பற்றியிருந்ததுடன், இதில் தொழில்நுட்பம், வடிவமைப்பு, பொருளடக்கம், பாவனையாளர் ஈடுபாடு, மொபைல் செம்மையாக்கம், இணையத்தள பார்வை, சமூக நோக்கம் போன்றவற்றை பின்பற்றியிருந்தது. விதிமுறை மீறல்கள் மற்றும் தவறான செயன்முறைகளை பின்பற்றியிருந்தவர்களுக்கு தண்டங்கள் விதிக்கப்பட்டதுடன், சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டிருந்த இணையத்தளங்கள் கௌரவிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டிருந்தது.

தரம், தங்கியிருக்கும் திறன், சிறந்த வாடிக்கையாளர் சேவை போன்றவற்றில் கவனம் செலுத்தியிருந்த *eTeleshop*, தொலைத்தொடர்பாடல் சாதனங்கள், பிரத்தியேக மின்சாதனங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கு, ஒப்பற்ற மற்றும் வெகுமதியளிக்கும் 'ஒன்லைன் சொப்பிங்' அனுபவத்தை வழங்குவதாக அமைந்துள்ளது.


இந்தக் கௌரவிப்பை கொண்டாடும் வகையில், தொடர்ந்தும் விரிவாக்கமடைந்து செல்லும், உயர் தரமான தயாரிப்புகள் மற்றும் ஒப்பற்ற 'ஒன்லைன் சொப்பிங்' அனுபவத்தை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் *SLT-MOBITEL eTeleshop* கவனம் செலுத்தி, தொழில்நுட்ப மற்றும் e-வணிக பிரிவை மேம்படுத்தும்.

*eTeleshop.slt.lk* என்பது இலங்கையில் காணப்படும் மிகவும் பழைமையான e-வணிக இணையத்தளங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. 18 வருடங்களுக்கு மேலாக செயலில் உள்ளது. 2019ஆம் ஆண்டு வரை, இந்த இணையத்தளம் *SLT* கூட்டாண்மை தளத்தின் ஓர் அங்கமாக அமைந்திருந்ததுடன், 2019ஆம் ஆண்டு முதல் தனியான இணையத்தளமாக இயங்க ஆரம்பித்திருந்தது.

கடந்த நான்கு வருட காலப்பகுதியில், இணையத்தளம் 'தொலைத்தொடர்பாடல் சாதனங்கள் மற்றும் பிரத்தியேக மின்சாதனங்கள் விற்பனை' பகுதியாக மாற்றி அமைக்கப்பட்டிருந்ததுடன், மாதாந்தம் 50,000 பார்வையாளர்களையும் பதிவு செய்கின்றது. *SLT-MOBITEL* வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் பரந்தளவு தயாரிப்புகள் மற்றும் *Wi-Fi* சாதனங்கள், தொலைபேசி சாதனங்கள், power backups, powerline devices, internet security products மற்றும் பல அம்சங்களையும் கொண்டுள்ளது.

மேலும், விற்பனையாளர்களுக்கு தமது விற்பனைப் பகுதிகளை *eTeleshop* ஊடாக நிர்வகித்துக் கொள்ளும் வாய்ப்பையும் இந்த இணையத்தளம் வழங்கியிருந்தது. நியம e-வணிக உள்ளம்சங்கள் பலதையும் இந்த இணையத்தளம் கொண்டிருந்ததுடன், தொழிற்றுறை நியமங்களுக்கமைய இவை அமைந்துள்ளன. சகல *eTeleshop* தயாரிப்புகளும் உத்தரவாத காலப்பகுதியை கொண்டுள்ளதுடன், புகழ்பெற்ற *SLT-MOBITEL* விற்பனைக்கு பிந்திய வாடிக்கையாளர் ஆதரவையும் கொண்டுள்ளன.

தனித்த இணையத்தளமாக அறிமுகம் செய்யப்பட்டு, கடந்த மூன்றாண்டு காலப்பகுதியில் சிறந்த பயணத்தை *SLT-MOBITEL eTeleshop* முன்னெடுத்திருந்தது. *BestWeb.LK 2023* விருதுகள் வழங்கும் நிகழ்வில் 'மெரிட்' விருதை சுவீகரித்திருந்தமையானது, பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற 'ஒன்லைன் சொப்பிங்' அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக *eTeleshop* செயற்பாடுகளை உறுதி செய்வதற்காகப் பணியாற்றிய அணியினரின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்தது.




## வசந்தமே வா...


நிலைதடுமாறி
உருபோலி ஆகையிலே
வரும் காலம் என்ற ஒன்று
அங்கே சென்று பார்க்கலாம்

அவன் வடித்தான்
ஜீவன் கொடுத்தான்
கருகடந்து வந்து தெரு
கடந்துபோகையில்
கதையை முடித்தான்
ஒரு முறை தான்
வாழ்க்கை என்றால்
அதில் நாம் மட்டும்
கோமாளிகளா?
என்ன வாழ்க்கையிது
என்று கேட்கிறது
பாதை மாறி மாறி போகிறது
உண்மை ஏது இதில்
உடல் கூட பொய் தானே

இருக்குமிடத்தில் இல்லை அன்பு
இல்லாதவனுக்கு தெரியுமது
கொண்டாடவே பிறந்தோம்
தினம்
அதை அடுத்தவன் கொண்டால்
பொறாமை வரும்
நீயென்பதும் நானென்பதும்
நிலைப்பதேயில்லை
நாம் ஒன்று என்றே வாழ்ந்தாலே
பிரிவுமில்லை

நகரட்டும் நாட்கள்
மலரட்டும் புதுப் பூக்கள்
வசந்தமே தேடி வா
இவன் வாசலை..!

சுவஸ்திகா, கொழும்பு



## நாணம்

முகமதின் முகாந்திரமிடலில்
முந்திக் கொண்டது
முழங்கை

பின்வந்த பாத்தி
மாக்களின் நடுவில்
ஊடுபயிரென
அவரை - புறம் தள்ளி

வேடம் தாங்கியென
தனித்து கிடக்கிறது
கதிர்களின் சாலை

முகில்களின் முனைப்பில்
இடியும் மின்னலுமாய்
வானமும் நாணமும்

புறங்கைகளின் புணர்வில்
புலரல்
புட்டு வெள்ளரியாய்
புன்னகை

வேட்கை தணிக்க
இரவிக்கும் இரவுக்கும்
தணிக்கை

ஈற்றில்...
தலைப்புச்செய்திகளுடன்
தணிந்து போகிறது
தேக(ச)த்தின் ஆடை நழுவல்

விமலஷாந்தன், திருகோணமலை



## அதிசயமே

பூமிப் பந்தில் நிற்கின்றோம்
பரந்து வான்வெளி கிடக்கிறது
பூமிப் பந்தைச் சூழ்ந்துவளி
போர்த்து மூடிக் காக்கிறது.

வளியில் ஆயிரம் கலவையுண்டு
வாயுக் கலவை அணுத்திரளும்
அலையும் தூசி துணிக்கைகளும்
ஆயிரம் கோடி வளியிலுண்டு

சூரிய கதிரலை ஊடறுத்து
சூட்டைப் பரப்பி ஒளியேற்றும்
பாரிய இயக்கம் புவிகொள்ளும்
பகலவன் செயலால் உயிர்வாழும்

வளியின் சமநிலை கலைந்துவிட்டால்
வாழ்க்கை வட்டம் நிகழாதாம்
வளியினைத் தூய்மைப் படுத்துங்கள்
சுகமாய் உயிரினம் வாழ்வதற்கு!

கேணிப்பித்தன்




## மழை



தகதகவெனக் கொதிக்கிற
வெய்யிலிடை
வியர்த்து வியர்த்து
வேலைச் சுமையுடன்
அல்லாடிக் கொண்டிருக்கையில்
வருகிறாய் நீ.

அண்மையில் எங்கோ
பெய்யும் மழையின் வாசனை ஏந்தி
ஈரமுத்தம் பொழிந்து
உடல் தீண்டி
மகிழ்வித்த குளிர் காற்றே

உன்னை அனுப்பிய
இறைவனின் நற் செய்தியின் பின்
பரிசாய் வரப்போகும்
மழைத்துளி பற்றிய கனவுகள்

துளிகளாய்
பின் பெருந்தூறலாய்
வரட்சி நீக்கும் மழையாய்
பொழியத் தொடங்கிற்று
இதயம் பூராவும்

அஷ்ரபா நூர்தீன்




மெக்சிகோ

# மெக்சிகோ நகரில் ‘ஏலியன்ஸ்’ கண்காட்சி

இந்தப் பிரபஞ்சத்தில் மனிதன் வாழ்வதற்கு ஏதுவான வேறு ஏதேனும் கிரகம் உள்ளதா, மனிதனைத் தவிர வேறு உயிரினங்கள் மற்ற கிரகங்களில் உள்ளனவா என்பது பற்றிய ஆராய்ச்சிகள் பல ஆண்டுகளாகவே நீடித்து வருகின்றன.

வேற்று கிரகவாசிகளான ஏலியன்கள் இருப்பது உண்மையா அல்லது பொய்யா என்பது இன்றுவரை நிரூபிக்கப்படாமல் உள்ளது. அதேநேரத்தில், ஏலியன்ஸ்கள் குறித்த விடயங்கள் வாய்வழிச் செய்திகளாகத்தான் அறிந்து வருகிறோம். இந்நிலையில், மெக்சிகோ நகரில் ‘ஏலியன்ஸ் கண்காட்சி’ நடத்தப்பட்டுள்ளது. ஏலியன்ஸ் கண்காட்சியை நடத்தி மெக்சிகோ அரசு அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இந்தக் கண்காட்சியில் 2 ஏலியன்ஸ்களின் உடல்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மனிதர்களைப் போல் அல்லாமல், மிகவும் சிறிய அளவில் இரண்டு உடல்கள் ஒரு பெட்டியில் வைக்கப்பட்டு காண்பிக்கப்பட்டன. இந்த உடலங்கள் குறைந்தது 1,000 ஆண்டுகள் பழைமையானவை என கூறப்படுகிறது.



இங்கிலாந்து

## மகளின் பெயரை பச்சை குத்தி உலக சாதனை




கின்னஸ் சாதனைக்காக பல்வேறு வகைகளிலும் தங்களது திறமைகளை நிரூபித்து சாதனை படைப்பவர்களின் எண்ணிக்கை சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. அந்தவகையில், இங்கிலாந்தை சேர்ந்த மார்க் ஓவன் எவன்ஸ் என்ற 49 வயதான நபர், தனது மகளின் பெயரை உடலில் 667 முறை பச்சை குத்தி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இவர், ஏற்கெனவே தனது மகளின் பெயரான ‘லூசி’ என்பதை 267 முறை பச்சை குத்தி, 2017ஆம் ஆண்டு சாதனை படைத்திருந்தார். இந்நிலையில், 2020ஆம் ஆண்டு அமெரிக்காவை சேர்ந்த டீட்ரா விஜில் என்பவர் தனது பெயரை உடலில் 300 முறை பச்சை குத்தி, மார்க் ஓவன் எவன்ஸின் சாதனையை முறியடித்தார். இதைத்தொடர்ந்து, எவன்ஸ் விஜிலின் சாதனையை முறியடிக்க, மீண்டும் இரண்டு ‘டாட்டூ’ கலைஞர்கள் மூலம் தனது உடல் முழுவதும் மகளின் பெயரை 667 முறை பச்சை குத்தி, கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்கா

## ஒரேயொரு ‘சிப்ஸ்’ சாப்பிட்ட சிறுவன் பலி

அமெரிக்காவின் பிரபல பன்னாட்டு சொக்கலெட் தயாரிப்பு நிறுவனமான ‘ஹெர்ஷே’, ‘ஆம்ப்ளிஃபை ஸ்னாக் பிராண்ட்ஸ்’ (Amplify Snack Brands) சிப்ஸ் மற்றும் சோளன்பொரி வகை உணவு பொருட்களை விற்பனை செய்வதில் முன்னணியில் உள்ளது.

இந்நிறுவனம் ‘பக்வி ஒன் சிப் சேலஞ்ச்’ (Paqui One Chip Challenge) எனும் பெயரில் ஒரு போட்டியை நடத்தி வருகிறது. பெரியவர்களும் நல்ல உடல்நிலையும் ஆரோக்கியமும் உள்ளவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கு பெற அந்நிறுவனம் வலியுறுத்தியிருந்தது.

இந்தப் போட்டியில், அந்நிறுவனம் தயாரிக்கும் ‘கரோலினா ரீபர்’ மற்றும் ‘நாகா வைபர்’ எனும் காரமான ஒரே ஒரு சிப்ஸை உண்டு, எவ்வளவு நேரம் ஏதும் குடிக்காமலும், உண்ணாமலும் இருக்க முடியும் என்பது கணக்கெடுக்கப்பட்டு வெற்றி




பெற்றவர் அறிவிக்கப்படுவர்.

இந் நிலையில் அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் மாநிலத்தை சேர்ந்த ஹாரிஸ் வோலோபா எனும் 14 வயது சிறுவன் இப்போட்டியில் தானாக பங்கு பெற விரும்பி, இதனை இணையதளம் வழியாக பதிவு செய்து, ஆர்வத்துடன் அதைச் சாப்பிட்டுவிட்டு பாடசாலைக்குச் சென்றுள்ளான்.

அப்போது கடுமையான வயிற்று வலி ஏற்பட்டு, பாடசாலையில் உள்ள செவிலியர் ஒருவரை அவன் தொடர்பு கொண்டதும், அவர் அவனை பரிசோதித்து முதலுதவி அளித்து வீட்டிற்கு அனுப்பியுள்ளார். வீட்டிற்கு வந்த சிறுவன் சிறிது நேரத்தில் நினைவிழந்து, உயிரிழந்துள்ளான்.

ஆந்திரா

## டிஜிட்டல் டீ கடை

தெலுங்கானா மாநிலம், கரீம் நகரில் தனியார் நிறுவனம், நவீன தொழில்நுட்பத்தில் புதிய டீக்கடையைத் திறந்துள்ளது. இந்த டீக்கடையில் டீ மாஸ்டர், பணியாளர்கள் கிடையாது. ‘கியூ ஆர் கோர்டை ஸ்கேன்’ செய்யும் வசதி செய்யப்பட்டு உள்ளது. இந்தக் கியூ ஆர் கோட்டை ஸ்கேன் செய்தால் போதும், தங்களுக்கு விருப்பமான டீயை வாங்கிக் குடிக்கலாம்.

மேலும் தண்ணீர் போத்தல், பிஸ்கட் உள்ளிட்டவையையும் பெற்றுக் கொள்ளலாம். நவீன தொழில்நுட்பத்திலான டீக்கடையை ஆந்திர மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.

இது குறித்து தனியார் நிறுவனத்தின் தலைமை



நிர்வாக அதிகாரி வினோத்குமார் கூறுகையில், “தற்போது டீ மாஸ்டர்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. மேலும், டீ மாஸ்டர்கள் அதிக அளவில் சம்பளம் கேட்கின்றனர். தொழில்நுட்பத்தால் வாடிக்கையாளர்கள் தேவையானதை எளிதாக விரும்பி சாப்பிடலாம். தற்போது ஆந்திரா, தெலுங்கானாவில் ஒரே சமயத்தில் 600 கடைகள் திறக்கப்பட்டுள்ளன. விரைவில் நாடு முழுவதும் இந்தத் தொழில்நுட்பத்தை கொண்டு செல்ல உள்ளோம்” என்று தெரிவித்தார்.

சென்னை

## கடத்தப்பட்ட மலைப்பாம்பு குட்டிகள், அணில் சிக்கின



தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் இருந்து, சென்னைக்கு தாய் ஏர்வேஸ் விமானத்தில் பயணித்த 35 வயது மதிக்கத்தக்க ஆண் பயணி, வைத்திருந்த இரண்டு பிளாஸ்டிக் கூடைகளில் இருந்து, அரியவகை மலைப் பாம்பு குட்டிகள் 15 மற்றும் அணில் ஒன்றும் சென்னை விமானநிலையத்தில் மீட்கப்பட்டன.

எந்த விதமான சான்றிதழும் இல்லாமல் அவற்றை கொண்டு வந்த அந்த நபரை, சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர். தொடர்ந்து, பெசன்ட் நகரில் உள்ள வனவிலங்கு பாதுகாப்புப் குற்றப்பிரிவு பொலிஸார் ஆய்வு செய்தனர். அப்போது அந்தக் கூடைகளில் இருந்தவை ‘பால் பைத்தான்’ என்னும் அரியவகையைச் சேர்ந்த மலைப்பாம்புகள் என்பது தெரியவந்தது.

மேலும், இவற்றுடன் ஆபிரிக்கா கண்டத்து அணிலும் பறிமுதல் செய்யப்பட்டது. இவ்வகைப் பாம்புகள் தாய்லாந்தில் இருந்து கடத்தி வரப்பட்டு, பெரும் பணக்காரர்களின் வீடுகளில் செல்லப் பிராணிகளாக வளர்க்க விற்பனை செய்யப்படுகின்றன. இதைத் தொடர்ந்து, 15 அரிய உயிரினங்களையும் மீண்டும் தாய்லாந்துக்கே அனுப்பி வைக்க, சுங்கத்துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

ஆந்திரா

## சிறுமியின் உடலத்தை அடக்கம் செய்வதை தடுத்த வெள்ளம்

ஆந்திரா மாநிலம் மீஞ்சி புட் மண்டலம், தும்மிடி புட் மலை கிராமத்தில் 550 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிறுமி, உடல்நல குறைவால் கடந்த 11ஆம் திகதி உயிரிழந்துள்ளார். மலை கிராமத்தில் சாலை வசதிகள் இல்லாததால், கிராமத்தின் குறுக்கே செல்லும் ஆற்றைக் கடந்து, சிறுமியின் உடலத்தை எடுத்துச் சென்று அடக்கம் செய்ய வேண்டும்.

ஆனால், கடந்த நான்கு நாள்களாக பெய்த பலத்த மழையின் காரணமாக, ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.



இதனால் சிறுமியின் உடலத்தை அடக்கம் செய்ய முடியாமல் கிராம மக்கள் அவதிப்பட்டனர்.

மூன்று நாள்களாக வீட்டிலேயே உடலத்தை வைத்திருந்தனர். ஆற்றில் வெள்ளம் ஓரளவு குறைந்ததும் சிறுமின் உடல சுமந்து சென்று, ஆற்றைக் கடந்து. உடலத்தை அடக்கம் செய்தனர்.



மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# நியூசிலாந்தை வீழ்த்திய இங்கிலாந்து

நியூசிலாந்துக்கு எதிரான நான்கு போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், ஓவலில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் இங்கிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

இங்கிலாந்து: 368/10 (48.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: பென் ஸ்டோக்ஸ் 182 (124), டேவிட் மலன் 96 (95), ஜொஸ் பட்லர் 38 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்ரெண்ட் போல்ட் 5/51)

நியூசிலாந்து: 187/10 (39 ஓவ. ) (துடுப்பாட்டம்: கிளென் பிலிப்ஸ் 72 (76) ஓட்டங்கள். பந்துவீச்சு: லியாம் லிவிங்ஸ்டோன் 3/16, கிறிஸ் வோக்ஸ் 3/31, றீஸ் டொப்லி 2/31, சாம் கர்ரன் 1/32)

போட்டியின் நாயகன்: பென் ஸ்டோக்ஸ்

இந்நிலையில் நான்காவது போட்டியானது லோர்ட்ஸில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

உலகக் கிண்ணத்துக்கான

## ஆப்கானிஸ்தான் குழாமில் நவீன்-உல்-ஹக்



சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத்துக்கான ஆப்கானிஸ்தான் குழாமில் வேகப்பந்துவீ ச்சாளர் நவீன்-உல்-ஹக் இடம்பெற்றுள்ளார்.

இறுதியாக 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே நவீன் ஒருநாள் சர்வதேசப் போட்டியொன்றில் விளையாடியிருந்ததுடன், கடந்தாண்டு ஜனவரி மாதத்தில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து இடைவெளியொன்றை எடுத்துக் கொள்வதாகக் கூறியிருந்தார்.

குழாம்: ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி (அணித்தலைவர்), இப்ராஹிம் ஸட்ரான், ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ், ரஹ்மத் ஷா, றியாஸ் ஹஸன், நஜிபுல்லாஹ் ஸட்ரான், மொஹமட் நபி, இக்ரம் அலிகில், அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய், ரஷீட் கான், அப்துர் ரஹ்மான், நூர் அஹ்மட், முஜீப் உர் ரஹ்மான், பஸல்கக் பரூக்கி, நவீன்-உல்-ஹக்.

மேலதிக வீரர்கள்: குல்படின் நைப், ஷரஃபுதின் அஷ்ரஃப், பரீட் அஹ்மட்.

ஆசியக் கிண்ணம்:

## இந்தியாவை வீழ்த்துமா பங்களாதேஷ்



ஆசியக் கிண்ணத் தொடரில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள இறுதி சுப்பர் 4 சுற்றுப் போட்டியில் பங்களாதேஷை இந்தியா எதிர்கொள்ளவுள்ளது.

இறுதிப் போட்டிக்கு இந்தியா ஏற்கெனவே தகுதி பெற்றுள்ள நிலையில் இஷன் கிஷன், விராட் கோலி, லோகேஷ் ராகுல், ஜஸ்பிரிட் பும்ரா, மொஹமட் சிராஜ்ஜுக்குப் பதிலாக ஷ்ரேயாஸ் ஐயர், சூரியகுமார் யாதவ், திலக் வர்மா, மொஹமட் ஷமி, பிரசீத் கிருஷ்ணா ஆகியோர் விளையாடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றனர்.

மறுபக்கமாக தொடரிலிருந்து ஏற்கெனவே பங்களாதேஷ் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில் அவ்வணி அழுத்தமின்றி விளையாடலாம். பங்களாதேஷுக்கு குழந்தை பிறப்புக்காக சென்ற முஷ்பிக்கூர் ரஹீமின் விடுப்பு நீடிக்கப்பட்டுள்ள நிலையில் அவரை அஃபிஃப் ஹொஸைன் பிரதியிடுவதுடன், மொஹமட் நைமை தன்ஸிட் ஹஸன் பிரதியிடுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில்

## இரண்டாமிடத்துக்கு முன்னேறிய கில்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு இந்தியாவின் ஷுப்மன் கில் முன்னேறியுள்ளார்.

ஆசியக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான், இலங்கைக்கெதிரான சுப்பர் 4 சுற்றுப் போட்டிகளில் 77 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே மூன்றாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி இரண்டாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை தென்னாபிரிக்காவுக்கெதிரான முதல் மூன்று ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 184 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர், ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

இந்நிலையில் மேற்கூறப்பட்ட ஆசியக் கிண்ணப் போட்டிகளில் 125 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் வீராட் கோலி, 10ஆம் இடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை, குறித்த போட்டிகளில் 109 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் அணித்தலைவர் றோஹித் ஷர்மா, 11ஆம் இடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. ஷுப்மன் கில், 3. றஸி வான் டர் டுஸன், 4. டேவிட் வோர்னர், 5. இமாம்-உல்-ஹக், 6. ஹரி டெக்டர், 7. குயின்டன் டி கொக், 8. விராட் கோலி, 9. றோஹித் ஷர்மா, 10. பக்கர் ஸமன்.

இதேவேளை, இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது போட்டியில் 3 விக்கெட்டுகளைக்



கைப்பற்றிய நியூசிலாந்தின் ட்ரெண்ட் போல்ட், மூன்றாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி இரண்டாமிடத்தை அடைந்துள்ளார்.

தவிர, மேற்கூறப்பட்ட போட்டிகளில் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் குல்தீப் யாதவ், 12ஆம் இடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறிய ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜொஷ் ஹேசில்வூட், 2. மிற்செல் ஸ்டார்க், ட்ரெண்ட் போல்ட், 4. அடம் ஸாம்பா, 5. மற் ஹென்றி, 6. முஜீப் உர் ரஹ்மான், 7. குல்தீப் யாதவ், 8. ரஷீட் கான், 9. மொஹமட் சிராஜ், 10. ஷகீன் ஷா அஃப்ரிடி.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஷகிப் அல் ஹஸன், 2. மொஹமட் நபி, 3. சிகண்டர் ராசா, 4. ரஷீட் கான், 5. அஸாட் வலா.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 15 செப்டெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.